# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 2332/04 - 2023 මැයි මස 15 වැනි සඳුදා - 2023.05.15

*2332/04 ஆம் இலக்கம் - 2023 ஆம் ஆண்டு மே மாதம் 15 ஆந் திகதி திங்கட்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


## பகுதி IV(அ) - மாகாண சபைகள்

### மாகாண சபை அறிவித்தல்கள்

**1987 ஆம் ஆண்டின் 42 ஆம் இலக்க, மாகாண சபைகள் சட்டம்**

*32(2அ) ஆம் பிரிவின் கீழான கட்டளை*

*1987 ஆம் ஆண்டின் 42 ஆம் இலக்க, மாகாண சபைகள் சட்டத்தின் 32(2அ) ஆம் பிரிவின் கீழ் மேல் மாகாண ஆளுநரால் எனக்களிக்கப்பட்ட தத்துவங்களின் பயனாக, மேல் மாகாண பகிரங்க சேவை ஆணைக்குழுவின் தவிசாளரான, உதய றோகான் த சில்வா ஆகிய யான், 2018, யூலை மாதம் 31 ஆந் திகதிய 2082/7 ஆம் இலக்க, அதி விசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்ட கட்டளையை, அதன் 05 ஆம் இலக்க மற்றும் 07 ஆம் இலக்க அட்டவணைகளை நீக்கிவிட்டு அவற்றுக்குப் பதிலாக பின்வரும் அட்டவணைகளை இடுவதன் மூலம் இத்தால் பின்வருமாறு திருத்துகிறேன்:-*

"அட்டணை இல. 05

| *நிரை I*<br>*தத்துவங்கள் கையளிக்கப்பட்ட அலுவலர்கள்* | *நிரை II*<br>*அலுவலர்களின் வகுதி* | *நிரை III*<br>*கையளிக்கப்பட்ட அதிகாரங்கள்* |
|---|---|---|
| 1. உள்ளூராட்சி மாகாண அமைச்சின் செயலாளர் (மேலே அட்டவணை 03 இல் குறிப்பிடப்பட்ட அதிகாரங்களுக்கு மேலதிகமாக) | I. பொது நிருவாகச் சுற்றறிக்கை (பொ.நி.சு) 06/2006 இன் படி மேல் மாகாண பகிரங்க சேவை ஆணைக்குழுவானது நியமிக்கும் அதிகாரியாகவுள்ள உள்ளூராட்சி அதிகார சபைகளில் SL சம்பள வகுப்பை சேர்ந்த உயர்நிலை அலுவலர்கள். | (அ) அமைச்சு, உள்ளூராட்சித் திணைக்களம் மற்றும் உள்ளூராட்சி நிறுவனங்களிடையே இடமாற்றம்செய்தல்<br>(ஆ) பணி நீக்கம் மற்றும் ஒழுக்காற்றுக் கட்டுப்பாடு |

| *நிரை I*<br>*தத்துவங்கள் கையளிக்கப்பட்ட அலுவலர்கள்* | *நிரை II*<br>*அலுவலர்களின் வகுதி* | *நிரை III*<br>*கையளிக்கப்பட்ட அதிகாரங்கள்* |
|---|---|---|
| | II. பொ.நி.சு. 06/ 2006 இன் படி மூன்றாம் நிலையைச் சேர்ந்த மாகாண பொது முகாமைத்துவ உதவியாளர் சேவை அதி சிறப்பு வகுப்பு அலுவலர்கள் | (அ) பிரதேச சபைச் செயலாளர் பதவிக்கு இடுகை<br>(ஆ) உள்ளூராட்சி நிறுவனங்களில் நிருவாக அலுவலர் பதவிகளில் இடுகை<br>(இ) அமைச்சு, திணைக்களம் மற்றும் நிறுவனங்களில் இடமாற்றம்<br>(ஈ) பணி நீக்கம் மற்றும் ஒழுக்காற்றுக் கட்டுப்பாடு |
| | III. (மாகாண பொது முகாமைத்துவ சேவை உதவியாளர் சேவை அதிசிறப்பு வகுப்பு அலுவலர்கள் தவிர்ந்த) பொ.நி.சு. 06/2006 இன் படி மேல் மாகாண பகிரங்க சேவை ஆணைக்குழுவானது நியமன அதிகாரியாக உள்ள உள்ளூராட்சி அதிகார சபைகளில் MN - 7 சம்பள வகுப்பில் மூன்றாம் நிலையைச் சேர்ந்த அலுவலர்கள். | (அ) பணி நீக்கம் மற்றும் ஒழுக்காற்றுக் கட்டுப்பாடு |
| 2. உள்ளூராட்சி ஆணையாளர் | I. (SL மற்றும் MN - 7 சம்பள வகுப்புகளைத் தவிர்த்து) பொ.நி.சு. 06/ 2006 இன்படி மேல் மாகாண பகிரங்க சேவை ஆணைக்குழுவானது நியமிக்கும் அதிகாரியாக உள்ள இரண்டாம் மற்றும் மூன்றாம் நிலையைச் சேர்ந்த அலுவலர்கள் | (அ) பணி நீக்கம் மற்றும் ஒழுக்காற்றுக் கட்டுப்பாடு |
| | II. பொ.நி.சு. 06/ 2006 இன்படி PL ஆரம்ப நிலை சம்பள வகுப்பைச் சேர்ந்த அலுவலர்கள் | (அ) பணி நீக்கம் மற்றும் ஒழுக்காற்றுக் கட்டுப்பாடு |
| | III. பொ.நி.சு. 06/ 2006 இன்படி உள்ளூராட்சி நிறுவனத்தின் பிரதம நிர்வாக அதிகாரியானவர் நியமிக்கும் அதிகாரியாக வுள்ள அமைந்துள்ள ஆரம்ப நிலையைச் சேர்ந்த பதவி தாங்குநர் | (அ) விசேட ஏற்பாடுகள் இருக்கும்போது பதவியிலுள்ள பதவி தாங்குநரதும் இயைபான உள்ளூராட்சி தலைவர்களினதும் இணக்கத்தின் அடிப்படையில் ஏனைய உள்ளூராட்சி நிறுவனங்களிற்கு இடமாற்றம் செய்தல் |

"அட்டணை இல. 07

| *நிரை I*<br>*தத்துவங்கள் கையளிக்கப்பட்ட அலுவலர்கள்* | *நிரை II*<br>*அலுவலர்களின் வகுதி* | *நிரை III*<br>*கையளிக்கப்பட்ட அதிகாரங்கள்* |
|---|---|---|
| 1. மாகாண சுகாதாரச் செயலாளர் (மேலே அட்ட வணை 03 இல் குறிப்பிடப்பட்ட அதிகாரங்களுக்கு மேலதிகமாக) | I. பொ.நி.சு) 06/ 2006 இன்படி மேல் மாகாண பகிரங்க சேவை ஆணைக்குழுவானது நியமிக்கும் அதிகாரியாக உள்ள மூன்றாம் நிலையைச் சேர்ந்த அலுவலர்கள்<br>(I) MP சம்பள வகுப்பைச் சேர்ந்த அலுவலர்கள் | (அ) மாகாணத்துக்குள்ளே ஆன இடமாற்றங்கள்<br>(ஆ) பணி நீக்கம் மற்றும் ஒழுக்காற்றுக் கட்டுப்பாடு |

| *நிரை I*<br>*தத்துவங்கள் கையளிக்கப்பட்ட அலுவலர்கள்* | *நிரை II*<br>*அலுவலர்களின் வகுதி* | *நிரை III*<br>*கையளிக்கப்பட்ட அதிகாரங்கள்* |
|---|---|---|
| 2. மாகாண சுகாதார சேவைகள் பணிப் பாளர் | (I) (MP சம்பள வகுப்பைத் தவிர்ந்த) (பொ.நி.சு) 06/ 2006 இன்படி மேல் மாகாண பகிரங்க சேவை ஆணைக் குழுவானது நியமிக்கும் அதிகாரியாக உள்ள இரண்டாம் /மூன்றாம்/ ஆரம்ப ஆரம்ப நிலையைச் சேர்ந்த அலுவலர்கள் | (அ) ஆயுர்வேத சுகாதார திணைக்களங்களைச் சேர்ந்த ஆட்சேர்ப்பு வகுப்பிலுள்ள அலுவலர்களின் பணி நீக்கம் மற்றும் ஒழுக்காற்றுக் கட்டுப்பாடு |
| 3. மாகாண ஆயுர்வேத ஆணையாளர் | II. (பொ.நி.சு) 06/ 2006 இன்படி PL சம்பள வகுப்பினையுடைய ஆரம்ப நிலையைச் சேர்ந்த பதவி தாங்குநர் | (அ) சுகாதாரத் திணைக்களத்தினுள் மாவட்டங் களிடையேயான இடமாற்றம்<br><br>(ஆ) மாகாணத்துள் ஆயுர்வேத திணைக்களத் தின் அலுவலர்களின் இடமாற்றம்<br><br>(இ) பணி நீக்கம் மற்றும் ஒழுக்காற்றுக் கட்டுப்பாடு |
| 4. பிராந்திய சுகாதார சேவைகள் பணிப் பாளர் | II. (பொ.நி.சு) 06/ 2006 இன்படி PL சம்பள வகுப்பினையுடைய ஆரம்ப நிலையைச் சேர்ந்த பதவி தாங்குநர் | (அ) மாவட்டத்திற்குள்ளான இடமாற்றம்" |

**உதய றோகான் த சில்வா** (சனாதிபதி சட்டத்தரணி),
தவிசாளர்,
பகிரங்க சேவைகள் ஆணைக்குழு,
மேல் மாகாணம்.

மேல் மாகாண பகிரங்க சேவை ஆணைக்குழு,
இலக்கம் 628, 10 ஆம் மாடி,
ஜனஜய நகர் கட்டிடம்,
நாவல வீதி, இராஜகிரிய,
2023, பெப்புருவரி 28.

EOG 05-0109